# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 07 | சைவநெறி | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ........................................................................................

### பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானுக்கு வீற்றிருக்கும் இறைவனது சிறப்புக் கருதி வழங்கப்படும் பெயர்,
    1. தட்சணாமூர்த்தி 2. நடராஜர் 3. தாயுமானவர் சுவாமி 4. லிங்கோற்பவர்

02. வியாழ பகவான் மக நட்சத்திரத்துடன் கூடிய கும்பராசிக்கு செல்லும் புண்ணிய காலம்,
    1. மகாமகம் 2. தைப்பூசம் 3. தைப்பொங்கல் 4. ஆனி மகம்

03. சிவபெருமானால் 'அம்மையே' என்று அழைக்கப்பட்ட சிறப்புக்குரியவர்,
    1. திலகவதியார் 2. ஆண்டாள்
    3. மங்கையற்கரசியார் 4. காரைக்காலம்மையார்

04. 'விருது குன்றமா.............' எனும் தேவாரத்தில் வரும் புராணக் கதை,
    1. மாம்பழக்கதை 2. முப்புரங்களை எரித்தமை
    3. மார்க்கண்டேயன் கதை 4. பிருங்கு முனிவர் கதை

05. பன்னிருவர் பாடிய நாற்பது பிரபந்தங்களின் தொகுப்பு அடங்கும் திருமறை,
    1. ஒன்பதாம் திருமுறை 2. பத்தாம் திருமுறை
    3. பதினோராம் திருமுறை 4. பன்னிரெண்டாம் திருமறை

(5x2=10 புள்ளிகள்)

**02. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. முதல் ஏழு திருமுறைகள் | கோவதை |
| 2. ஏடு தொடக்குதல் | திதி விரதம் |
| 3. மனு நீதி கண்ட சோழன் கதை | அடங்கன் முறை |
| 4. சங்கடஹர சதுர்த்தி | திருமுறைகள் |
| 5. இறைவன் மீது பக்தியை ஏற்படுத்துவன | விஜயதசமி |

(5x2=10 புள்ளிகள்)



kalvi.lk

**03. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குறியினுள் அடையாளம் இடுக.**

1. வெள்ளிக்கிழமை சைவ சமயத்தவரின் புனித நாளாகும். ( )
2. பஞ்சமாபாதகங்களைப் புரிவதால் தீமை எதுவும் நடவாது. ( )
3. பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும். ( )
4. புதுமனை புகுதலின் போது சுபமுகூர்த்தம் பார்ப்பதில்லை. ( )
5. இலங்கையை 'சிவபூமி' என திருமூலர் சிறப்பிக்கின்றார். ( )

(5x2=10 புள்ளிகள்)

**04. பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளிகளைப் பூர்த்தி செய்க.**

**(சடங்குகள், தெய்வத்தன்மை, பாடசாலை, திருப்புகழ், தோழன்)**

1. திருமுறைகள் ..........................................பொருந்திய அருட்பாடல்களாகும்.
2. மாணவர்களுக்கு கல்வி, ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுப்பது ............................................ ஆகும்.
3. ஆகமம் சாராத வழிபாட்டில் ..............................................................முக்கியம் பெறுகின்றன.
4. சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை ........................... ஆகக் கொண்டு யோக நெறியில் நின்றார்.
5. 'இறவாமல் பிறவாமல்' என்ற ..................................... கதிர்காம கந்தன் மீது புகழ்ந்து பாடப்பட்டது.

(5x2=10 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட 05 வினாக்களுக்கு விடையளிக்குக.**

01) 1. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினைப் பிழையற வரிக்கிரமமாக எழுதுக.
2. அவற்றைப் பாடியவர் பெயர் , பண் என்பவற்றைக் குறிப்பிடுக.
அ) விருது குன்றமா மேருவில் .................
ஆ) மாதர் பிறைக்கண்ணி......................
இ) நத்தார் படை ஞானன்....................
ஈ) குழலொலி யாழொலி..............................

(6x2=12 புள்ளிகள்)

02) 'மனித வாழ்விற்கு உயர்வான எண்ணங்கள் அவசியம்'
அ) பாடசாலையில் கொண்டாடப்படும் சமய நிகழ்வுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
ஆ) வாழ்வியலுக்கு வேண்டிய நற்பண்புகள் 4 தருக.
இ) வாழ்வில் எதிர்கொள்ளும் துன்பங்களைத் தவிர்க்க நாம் எவ்வாறு வாழ்தல் வேண்டும்?

(4+4+4=12 புள்ளிகள்)

03) 'சமய வாழ்வு வாழ்ந்த மகான்கள் சமய குரவர்கள்'
அ) சமய குரவர்கள் எனப்படுவோர் யாவர்?
ஆ) திருமுறைகளை ஓதுவதன் மூலம் நாம் அடையும் பயன்கள் 2 தருக.
இ) திருநாவுக்கரசு நாயனார் ஆற்றிய அற்புதங்கள் 4 தருக. (4+4+4=12 புள்ளிகள்)


kalvi.lk

04) ‘சைவத்தின் முடிந்த முடிவு சைவசித்தாந்தம் ஆகும்’

அ) அறிவித்தால் அறியும் பொருள் எது?

ஆ) கடவுளின் இரண்டு நிலைகளும் எவை?

இ) முத்தி நிலையில் ஆன்மாவின் நிலை எவ்வாறு இருக்கும்? (4+4+4=12 புள்ளிகள்)

05) ‘ஆலயங்கள் ஆன்மாவை இலயப்படுத்துவன’

அ) கிராமியத் தெய்வங்கள் 4 குறிப்பிடுக.

ஆ) இலங்கையில் காணப்பட்ட புராதன ஈஸ்வரங்கள் எவை?

இ) விநாயகர் ஆலயங்களுள் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் சிறப்புப் பெறக் காரணம் யாது?

(4+4+4=12 புள்ளிகள்)

06) அ) இலங்கையில் வாழ்ந்த சமயப் பெரியார்கள் இருவரைக் குறிப்பிடுக.

ஆ) சேர்.பொன். இராமநாதனுக்கு பிரித்தானிய அரசினால் வழங்கப்பட்ட பட்டம் யாது? எவ்வாண்டில் வழங்கப்பட்டது?

இ) சேர்.பொன். இராமநாதன் ஆற்றிய சமயப் பணிகள் எவை?

(4+4+4=12 புள்ளிகள்)

07) பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ) ஆலய வழிபாடு

ஆ) வாழ்வியற் சடங்குகள்

இ) மாத விரதங்கள்

ஈ) மாணிக்க வாசக சுவாமிகள்

உ) நாட்டார் வழிபாடு (6x2=12 புள்ளிகள்)

LMDUnit Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page